நயன ரோக சிகித்ஸா தீபம்.



ஆசிரியர்:

திரு. T. S. அம்ருதலிங்கம் பிள்ளை

அவர்கள்.



பதிப்பாசிரியர்:

Dr. S. வெங்கட்ட ராஜன், L. I. M. (Regd)

1969, ஸகாநாயகன் தெரு,

தஞ்சாவூர்.

954



சரபேந்திரா ரெமிடீஸ்.

(ஸ்ரீ வேங்கடரமணா ஆங்கில-ஆயுர்வேத வைத்தியசாலையுடன் இணைக்கப்பட்டது)

(ஸ்தாபிதம் 1951.)

தஞ்சை ஸரஸ்வதி மஹால் சரபேந்திர வைத்திய முறைகளிலிருந்து தேர்ந்தெடுத்து, முறைப்படி கைதேர்ந்த நிபுணர்களால் தயார்செய்யப்பட்ட மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற ஆயுர்வேத சித்த மருந்துகளும் விற்பனைக்குக் கிடைக்கும்.

நயன ரோக சிகித்ஸா தீபம்.



பரம்பரையாகத் தஞ்சை அரண்மனைக் கண்வைத்தி
யர்களாக இருந்த குடும்பத்தினரும் இந்திய
வைத்தியக் கல்லூரியில் கண் வைத்தியப்
பேராசிரியராக இருந்தவருமாகிய
கரந்தை திருவாளர்,
Dr. T. S. அம்ருதலிங்கம் பிள்ளை
அவர்களின் அனுபவ முறைகள்.






...ஷெயரின் மாணாக்கரும்,
தஞ்சை ஸரஸ்வதி மஹால் "சரபேந்திர
வைத்திய முறை" களின் பதிப்
பாசிரியருமான

Dr. S. வெங்கட்ட ராஜன், L. I. M. (Regd)
அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

1954

 [விலை 0-8-0



கண் வைத்தியர் திருவாளர்

T. S. அம்ருதலிங்கம் பிள்ளை

அவர்கள்

பதிப்பாசிரியர் முன்னுரை.

கண் வைத்தியத்தில் நீண்டகால அனுபவம் வாய்ந்தவரும், முதிர்ந்த வயதினருமான கரந்தை திரு. T. S. அம்ருதலிங்கம் பிள்ளை அவர்களை எல்லோரும் அறிவார்கள். அன்னார் அத்தொழில் தனக்குப்பின் மறைந்து விடக்கூடாதென்றெண்ணி அதில் பயிற்சியைச் சுமார் 10 வருடங்களாக எனக்கு மனமுவந்து அளித்ததுடன், அதற்காகத் தன்னிடமுள்ள பெருமை வாய்ந்த மருந்துகளையும், அவைகளைச் செய்யவேண்டிய முறைகளையும் அளித்துள்ளார் என்பதைப் பெருமையுடன் தெரியப்படுத்தக் கடமைப் பட்டுள்ளேன். இவ்வைத்திய முறைகளைக் கொண்டு, பில்லம் (Trachoma) பித்தகாசம் (cataract) முதலான தீராத கண்ணோய்களை நாம் சௌக்கியப்படுத்த முடியும். ஆகவே, ஷை முறைகளைப் பின்பற்றி மற்ற வைத்தியர்களும் ஏனையோரும் பயனடைய வேண்டும் என்ற அவாவே இச்சிறு பதிப்பின் நோக்கம். ஆனதுபற்றி இதில் காணப்படும் முறைகளை அனுபவத்திற்குக் கொண்டுவருவதுதான் இதர வைத்தியர்கள் அன்னாருக்குச் செய்ய வேண்டிய கைம்மாறாகும். மேலும், இதனை "ஹிதபாஷிணி" பத்திரிகை மூலம் வெளியிட்டு ஆதரவு அளித்ததற்கு அதன் ஆசிரியர் ப்ரும்மஸ்ரீ முத்துகிருஷ்ண சாஸ்திரிகளுக்கும் என் நன்றி உரித்தாகும்.

1969 ஸ்ரீ ரங்க நிவாஸ்,
ஏகாநாயகன் தெரு,
தஞ்சை.

Dr. S. வெங்கட்டராஜன்,
L. I. M. (Regd)

அம்ருதலிங்க கண்வைத்தியசாலை,

1969, ஸகாநாய்கன் தெரு,

தஞ்சாவூர்.

கீழ்க்கண்ட மருந்துகள் விற்பனைக்குக் கிடைக்கும்.

நாரிகேளாஞ்சனம்.

இஃது கண்களில் தாக்கும் உஷ்ணத்தைப் போக்கக் கூடியது. பார்வை மங்கல், கண் எரிச்சல், சிவப்பு, கண் குத்தல் முதலியவைகள் நீங்கும்.

¼ அவு. ரூ. 1-0-0

பித்தகாச தைலம்.

வயதானவர்களுக்கு ஏற்படும் பித்தகாசம் (cataract) ரோகம் சாந்தமாகும்.

16 அவு. ரூ. 10-0-0

பித்தகாச மாத்திரை.

பித்த காசத்திற்கு 6 மாதகாலம் உபயோகிக்கக் கூடிய மருந்து.

ரூ. 15-0-0

பிருங்காமலத் தைலம்.

16 அவு. ரூ. 8-0-0

மேலும் இப்புத்தகத்தில் காணும் இதர மருந்துகளும் ஆர்டரின் பேரில் செய்து கொடுக்கப்படும். மற்ற கண் வைத்திய ஆலோசனைகளுக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.

Dr. S. வெங்கட்டராஜன் L. I. M. (Regd.)

தஞ்சை.

நயனரோக சிகித்ஸா தீபம்.

அன்பர்களிதயத்து அகலாதிருந்து இன்பவமுது அளிக்கும் இறைவன் அருளைச் சிரமேற்கொண்டு இச்சிகித்ஸா புஸ்தகத்தை யாம் எழுதலானோம்.

இனி, முந்நீர் சூழ்ந்த இம்முழுவுலகில் பண்டிதமாற்றப் பலநூல்கள் ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும், தெலுங்கிலும், ஹிந்தியிலும், இருந்தும் சரீர வைத்யம், இரண வைத்யம், பாலவாகடம் முதலியவைகளை ஆங்கிலத்திலும், ஆயுர்வேதத்திலும், தமிழிலும் மக்கள் ஏராளமாகப் பயின்று கண் வைத்யத்தை மட்டும் கவனிக்காது விட்டுவிட்டதால் மிகக்குறைபட்டு, சிலர் "பில்ல" ரோகத்திற்கு மட்டுமே பண்டிதஞ் செய்து வருகின்றார்கள். சிலர் "படலம்" ஒன்றையே சிகித்ஸிக்கின்றனர். சிலர் "கண்வலி"யை மட்டிலும் நிவர்த்தி செய்கின்றனர். சிலர் "காச" ரோகமொன்றிற்கே சஸ்த்திரப் பிரயோகம் (Cataract Operation) செய்து வருகிறார்கள். மேலும் அவர்கள் சஸ்திரப் பிரயோகம் செய்யத் தகுதியுள்ள கண், தகுதியில்லாத கண் என்ற பாகுபாடுகளைத் தெரிந்துகொள்ளாமல் செய்துவிட்டு ஓடிவிடுகின்றனர். இம்மாதிரித் தொல்லையைச் சர்க்கார் அறவே ஒழிக்க, லைசென்ஸின்றி இத்தொழிலைச் செய்யக்கூடாதென்றும் அப்படி மீறிச் செய்தால் சரீரதண்டனை, தொகை அபராதம் முதலியவைகட்கு உட்படுவார்களென்று நிபந்தனைகள் விதித்துவிட்டபடியால் அவர்களால் ஏற்படும் துன்பமும் குறைந்தது. கண்வைத்யம் நன்றாகப் பரவாமலிருப்பதற்குக் காரணம் சரியான கண்வைத்யநூல் இல்லாமை ஒன்று அனுபவ முதிர்ச்சி இல்லாமை மற்றொன்று. இக்குறைகளைத் தீர்ப்பான் பொருட்டு யாம் வைத்ய நூல்களை ஓலைகளிலிருந்து சேர்த்துத் தொகுத்து அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிறோம். அப் புஸ்தகத்தின் பெயரோவெனில் "அகஸ்தியர் நயன விதி 500" அப்புஸ்தகத்தை அச்சிடும் பாத்யம் அநேக கைகள் மாறி அச்சிடப்பட்டு சென்னை ஸ்ரீ கந்தஸ்வாமி கோவிலுக்கருகிலுள்ள புஸ்தகக் கடைகளில் கிடைக்கின்றன.

அதை யாங்கள் ஐந்து தலைமுறையாக ஆதாரமாய் வைத்துக்கொண்டு பண்டிதஞ்செய்து தஞ்சையை யாண்ட மகாராட்டிர அரசர்களால் நன்கு மதிக்கப்பட்டும் ஒவ்வொரு தலைமுறையிலும் ஏராளமான பரிசுகள், மான்யங்கள், பிருதுகள், ஆபரணாதிகள், மருந்திடுவதற்குத்தக்கபடி தங்கத்தினாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்ட கோல்கள், சந்தன மரங்களைக் கொண்டு உப்பரிகை யமைந்த வீடு முதலியவைகளைப் பரிசுபெற்று, மாண்புடைய மக்களாலும் புகழப்பட்டு வந்தனம்.

கண்வைத்ய நூல்களில் நேத்திரத்தில் ஏற்படும் வியாதிகள் 96 எனக் கூறப்பட்டிருப்பினும் 96 வியாதிகளையும் கண்டறிந்தார் ஒருவருமிலர். அவைகளில் சிலவையே எம் அனுபவத்திற்கு வந்ததை மட்டுமெடுத்து யாம் உலகிற்குப் பேருதவியா யிருக்கட்டு மென்று உன்னி இச்சிறு புத்தகத்தை வெளிப்படுத்தலானேம்.

கண்ணேய் வருவதற்குக் காரணங்கள்.

கேர்பத்தில் சிசுவாழ்போது கிருமிகள் சேர்ந்திட்டாலும்
கப்பிய பசியுற்றலும் கலக்கங்கோள் திகில்நேர்ந்தாலும்
செப்புமாங் கனிகள்மெத்தத் தேடியே புசித்திட்டாலும்
ஒப்பறு மகவின் கண்ணில் வ்யாதிவந் தணுகுந்தானே. (1)

(இதன் பொருள்) சிசுவானது தாயாரின் கெர்ப்பத்திலிருக்கும்போது தாயின் வயிற்றில் கிருமிகள் சேர்ந்திருந்தாலும், தாயார் பசியினல் வருந்தினலும், அவள் கலங்கும்படியான திகிலடைந்தாலும், தாயார் மாங்காய் மாம்பழம் முதலியவைகளை அதிகமாக விரும்பித்தின்றாலும், சிசு பிறந்தவுடன் அதன் கண்களில் வியாதிகள் சம்பவிக்கும்.

கடுகிய வெயிலினலும் கனத்தடி சுடுகையாலும்
தடியடி படுகையாலும் தலையது சுமையினலும்
புடுகவே எண்ணெய்வார்த்து முழ்கிப்பின் படுக்கையாலும்
படிப்பினிற் கூர்மையாலும் படர்ந்திடுங் கண்ணினேயே. (2)

(இ-ள்) அதிகமான வெய்யிலில் நடமாடுவதனலும், கடுமையான வெய்யிலில் வெறுங்காலுடன் ஸஞ்சரிப்பதாலும், தடியினலடிபடுவதனலும் தலையில் அடிக்கடி பாரம் சுமப்பதனலும். எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தபின் படுத்து உறங்குவதனலும், கூர்ந்து படிப்பதனலும் கண்களில் ரோக முண்டாகும்.

உட்டண மதிகத்தாலும் உதித்திடு மந்தத்தாலும்
உட்டணப் பொருள்க டம்மை யுகந்துதான் முகராலாலும்
உட்டண வெயிலில் நாளு முழன்றுநீ ராடலாலும்
உட்டண மதிகமீறி உதித்திடு கண்ணினேயே. (3)

(இ-ள்) தேகத்தில் உஷ்ணம் அதிகமானலும், வயிற்றில் மந்தமேற்பட்டாலும், உஷ்ணப்பொருள்களான சண்பகமலர், கோரோசனை, கஸ்தூரி கர்ப்பூரம், நவசாரம் முதலான பொருள்களை முகர்வதாலும், கடுமையான வெயிலில் அலைந்து வந்தவுடன் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதாலும் தேகத்தில் சூடு அதிகரித்துக் கண்களில் நோயை யுண்டாக்கும்.

நித்திரையில்லாததாலும் நீள்வெய்யிலோழகல் தன்னல்
நித்திரைசமயந் தன்னில் நிமிர்தலை கவிழ்தல் தன்னல்
பத்தியங் காடி கொள்ளல் பருதுநீரதிகம் கொள்ளல்
மத்திய மதிகக் காற்றல் வந்திடுங் கண்ணினேயே. (4)

(இ-ள்) உறக்கமில்லாமலிருந்தாலும் நீண்டதூரம் வெய்யிலில்பிரயாணஞ் செய்வதாலும் தூக்கம்வரும் வேளையில் படுத்துக்கொள்ளாமல் உட்கார்ந்தபடி உறங்குவதாலும், பத்தியம்பார்க்கும்போது காடி முதலான புளிப்புச்சுவையுள்ள பதார்த்தங்களை சாப்பிடுவதாலும், அதிகமாகத் தண்ணீர் பருகுவதனாலும், கள் அருந்துவதாலும், தேகத்தில் அதிகக்காற்று படும்படியாக இருந்தாலும் தண்வியாதிகள் உண்டாகும்.

மனமிடை துன்றினாலும் மாதர்தம் மாசையாலும்
கனமலச் சேர்க்கையாலும் கவிழ்ந்திடு பார்வையாலும்
தனமிகக் கெடுகையாலும் தணிவிலா நடையினாலும்
சினமிகக் கொள்ளலாலும் சேர்ந்திடும் நயனனேயே. (5)

மனதில் வருத்தமேற்பட்டாலும் பெண்களின்மேல் மையல் கொள்வதனாலும், வயிற்றில்மலஞ்சேர்ந்தாலும், கவிழ்ந்த பார்வையாகவே வேலைகளைச் செய்வதனாலும், திரவிய நஷ்டம் அதிகமானாலும், ஓய்வில்லாமல் நடப்பதனாலும், அடிக்கடி கோபித்துக்கொண்டாலும் கண்களில் வியாதிகள் ஸம்பவிக்கும்.

கண்ணது அழன்றெரித்த காரணமேதோ வென்னில்
நண்ணிய வப்புதன்னை நலமிகப் பருகையாலும்
திண்ணிய வறட்சியாலும் சேர்ந்தெண்ணெய் போகாதாலும்
விண்ணெழ மின்னலோடு விளங்குதீப் பார்ப்பதாலும் (6)

(இ-ள்) தண்ணீரை அதிகமாக அருந்துவதாலும், தேகத்தில் அதிக வறட்சியாலும், எண்ணெய் தேய்த்து முழுகும்போது சிகையில் எண்ணெய் போகாமலிருந்தாலும், ஆகாயத்தில் உண்டாகும் மின்னலைப்பார்ப்பதாலும் எரியும் நெருப்பைப் பார்ப்பதாலும் கண்களில் வியாதிகள் வரும்.

தடியடிபடுகையாலும் தலையது சுமையினாலும்
கடிவிரை நடையினாலும் கவிழ்ந்திடும் பார்வையாலும்
நெடுவிரல் நகத்தினாலும் நெருங்கு நித்திரையினாலும்
படியெழ கூர்மையாலும் பாவையிற் படருனேயே. (7)

(இ-ள்) தடியினால் அடிபடுகையினாலும், தலையில் சுமையைத் தாங்குவதாலும், விரைவாக நடப்பதாலும், கவிழ்ந்த பார்வையாக இருந்து ஒரு

தொழிலைச் செய்வதாலும், விரல்களில் நகங்களை அதிகமாக வளரவிடுவதாலும், அதிகமாய்த் தூங்குவதாலும், உற்றுப்பார்த்துப் பார்த்து படிப்பதாலும் கண்களில் நோயுண்டாகும்.

உண்டிடு மரனந்தன்னில் உகந்துகல் கடிக்கையாலும்
கொண்டகல் மயிரினாலுங் கொடுமலச் சேர்க்கையாலும்
பண்டுவெற் றிலையும்பாக்கும் பக்கரை யடக்கையாலும்
கண்டநேத் திரந்தனக்குக் கருதியே நோய்க்குத்தாயாம் (8)

(இ-ள்) உண்ணும் ஆகாரத்தில் கல் கடிபடுவதாலும், கல், மயிர் முதலியவை ஆகாரத்துடன்கலந்து உட்செல்லுவதனாலும், காரணமில்லாத மலச்சிக்கல், வெற்றிலைபாக்கைச் சுவைத்துக் கன்னக்குறடுகளில் அடக்கி வைத்தாலும் கண்களில் நோயுண்டாகும்.

வைத்யருக்குப் புத்தி கூறல்.

மருந்துதா னெழதும்போது வாய்த்தவா சனத்திருந்து
கருங்குழல் மானேகேளாய் கவீனம்போல் கிழக்குநோக்கி
இருந்தபின் னப்பால்நீயும் இயல்புற விடத்திலிட்டு
வருந்திப்பின் வலத்திலிட்டால் மாசறத் தீருங்காணே. (9)

(இ-ள்) நோயாளிக்குக் கண்களில் மருந்தைத் தீட்டும்போது, உன் ஆசனத்திலிருந்துகொண்டு கரிய கூந்தலையுடைய மான்போன்ற மருண்ட பார்வையுடைய பெண்ணே நீ கேட்பாயாக! க3வீனம் (**गवीनम्**) என்பது வெண்ணெயின் பெயராகும். அதைப்போல் கிழக்கு முகமாய் நீ உட்கார வேண்டும். கவீனம் என்றதனால் அதன்நிறத்தையும், குணத்தையும் கிரஹிக்க வேண்டும். நிறம் வெண்ணிறமானபடியால் உன் உள்ளம் களங்கமில்லாமல் இந்நோயாளியினிடம் எவ்வளவு பணம் வவ்வலாம் என்ற களங்கமும், உன்னிடத்தில் ஆடவரும், அரிவயரும் வருவார்களானதால் அரிவையர் களிடத்தில் மோகிக்கும் களங்கமில்லாமலும் இருத்தல்வேண்டும் குணத்தைப்பற்றியோ வெனில் சிறிது நேரம் மனிதர் கையிலிருந்தால் சரீரஉஷ்ணம் தாங்காமல் வெண்ணெய் இளகிவிடுந்தன்மை யுள்ளதாகையால் அதைப் போல நோயாளி படுந்துயரைப்பார்த்து வைத்யன் மனமிளகி அதைப் பரிஹரிக்க உடனே வகை தேடவேண்டும்,

முற்காலத்திலெழுதி வைக்கப்பட்ட சில ஓலையேட்டுப் பிரதிகளில் "கலீனம்" என்றிருக்கிறது. இதற்கும் பொருள் அமைந்து கிடக்கிறது. "வ" என்ற அக்ஷரத்திற்கும் "ல" என்ற அக்ஷரத்திற்கும் ரூபம் சிறிதுதான் வித்யாஸம் அப்படியே க2லீனம் என்று வைத்துக்கொண்டால் க2லீனம்

(खलीनम्) என்பது குதிரையின் கடிவாளமாகும். வ்யாதியையொரு முரட்டுக் குதிரையாக வைத்துக்கொண்டு அதை யடக்கியாளக் கடிவாளம் போன்று வைத்திய சாஸ்திர நிபுணனாய் இருத்தல் வேண்டும் என்பது பொருள்.

கிழக்கு நோக்கி உட்காருவது எதற்கென்றால் கண்களுக்கு அதிதேவதை சூரியபகவானாதலால் அவருடைய கிழக்கு, மேற்கு ஆகிய இரு திக்குகளும் வாஸ்துவான படியால், காலை நேரத்தில் வைத்யன் கிழக்குமுகமாக உட்கார்ந்து கொண்டு தினகரனை ஸ்மரித்துக் கொண்டிருக்க வேண்டும். பின்பு சாஸ்திரோக்தமான உரைக்கல்லில் மாத்திரையை இழைத்து அது கெட்டியான பின் வலது கையில் மாற்றி வைத்துக் கொண்டு இடதுகை ஆள்காட்டி விரலில் மருந்தைச் சுத்தமாக வழித்துக்கொண்டுகல்லைக் கீழே வைத்துக் கையில் சாஸ்திரோக்தமாய் சொல்லப்பட்ட கோலைப் பெருவிரல், நடுவிரல் இவற்றால் மத்தியில் பற்றி, வழித்த மருந்தை விரல்நுனியில் ஒன்றாய்ச்சேர்த்து, கோலின் ஒரு நுனியில் பாதியும், மற்றொரு நுனியில் பாதியாகவும் வழித்தெடுத்து வைத்துக்கொள்ளவும். பின்பு நோயாளியை உன்னெதிரே இருத்தி அவனது கண்ணின் மேலிமையை இடதுகைப் பெருவிரலால் மேலே இழுத்துக் கொண்டும், வலதுகை மணிக்கட்டால் கீழே இழுத்துக் கண்களைத் திறந்து கொண்டு முதலில் இடது கண்ணில் திறந்த கண்ணின் மத்தியில்,கோலைவைத்து இமைகளைமூடிவிட்டுக் காதின் பக்கம் கோலை நேராக வைத்துக்கொண்டு, மெதுவாய் இழுத்துவிட வேண்டும். இப்படியே வலது கண்ணிலும் மருந்தை தீட்டியபின், இரு கண்களின் கண் மடல்களை மேலும் கீழும் இழுத்துப் பரவி விட்டுவிட வேண்டும். கோலின் ஒரு நுனியால் மருந்திட்ட பிறகு அதே நுனியில் மருந்தை மறுபடியுமெடுத்துத் தீட்டுதல் கூடாது. அதை உடனே அலம்பி விடவும். இதற்குப் பிரமாணம்,

"கண்ணெச்சல் கண்ணிவிடார், காலொடு கால் தேயார்"

ஆசாரக்கோவை சூத்திரம்.

என்றவாறு மருந்திட்டால் நோயானது குற்றமற அறும்.

இனி வைத்தியரைப் பற்றியோவென்றால் ஆசார புருஷனும், நல்லொழுக்க முள்ளவராயும், அவசியம் ஈச்வர பக்தியுள்ளவராயும் இருத்தல் வேண்டும். அவ்வாறிருந்தால்தான் இவர் கைவைத்தால் ஹஸ்தவிசேஷம் ஒருபங்கு மருந்தின் குணம்,ஒரு பங்காக இருந்து நோய் பறந்தோடும். இதற்கு அகஸ்தியர் தேவதைகளின் விபரம் கூறியுள்ளார்.

பிடித்திருந்த கல்லுக்குத் தேவதைதானேது
பிறமூல தேவதையின் பேர்தானேது
அடுத்திருந்த தனப்பால்தா னுவதேது
அணிவிரலும் சிறுவிரலும் நடுவிரலும் சொல்லும்
தடுத்திருந்த கயிறேது பைதானேது
தவறமலுரைத்தபின் வாங்குவிரலேது
படித்திருந்த பண்டிதரே யிந்தநூலை
பதறமலின்னதென்று பகருவீரே· (10)

(இ-ள்) நீங்கள் இடதுகையில் பிடித்திருக்கும் உரைகல்லுக்குத் தேவதை யாது? அதன் மூலதேவதையின் பெயர் என்ன? உனக்கு சமீபத்திலிருக்கும் தனப்பால் எதைக்குறிக்கிறது? மோதிரவிரல், சுண்டிவிரல் இவைகளின் பிரயோஜனம் யாவை? மருந்துப் பையின் கயிறாவது யாது? மருந்துப்பையாவது என்ன? உரைகல்லின்மேல் ஒரு சொட்டுப் பாலை வைத்து மாத்திரையை வலது கையில் பற்றி வலமாக வுரைத்து மருந்து இறுகியபின் எவ்விரலால் மருந்தை வழித்தெடுக்க வேண்டும்?

விடை

பிடித்திருந்த கல்லுக்குத் தேவதைதான் மாயோன்
பிறமூல தேவதையிந் திரனே டீசன்
அடுத்திருந்த தனப்பால்தா னமுதமாகும்
அணிவிரலும் சிறுவிரலும் சிவநந்தியாகும்
தடுத்திருந்த பை வைகுண்டம் கயிறு சக்தி
தவறமலுரைத்தோம் நாம் தாணிமீதின்
படித்திருந்த பண்டிதரே பெருவிரலும் நடுவிரலால்
பண்பினுல் மருந்திடுதல் பசுமைதானே. (11)

(இ-ள்) நீ இடது கையில் பற்றியிருக்கும் உரைகல்லுக்குத் தேவதை 'ஸ்ரீ மஹாவிஷ்ணு'வாகும், மூலதேவதை ' இந்திரனும்'', "பரமசிவனும்'' ஆகும். உனக்குப் பக்கத்திலிருக்கும் தனப்பால் "அமுத'' மாகும். மோதிர விரலும் சுண்டிவிரலும் சிவனும் நந்தியுமாகும். மோதிரவிரலுக்கும் சுண்டி விரலுக்கும் உயரத்தினளவிலுள்ள வித்யாஸம்தான் அனேகமாக எல்லா கோவில்களிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் லிங்கத்திற்கும் நந்திக்கும் உள்ள வித்யாஸமாகக் காணப்படுகிறது. மருந்துகள் வைக்கப்பட்டிருக்கும் பை 'ஸ்ரீவைகுண்டமாகும்' அப்பையைக் கட்டுவதற்கான கயிறு 'சக்தி' யாகும். பெருவிரலும் நடுவிரலைக்கொண்டும் மருந்திடும் கோலைப்பற்றி மருந்திடுதல் நல்லது.

ஏனெனில் பஞ்சபூதங்களான ப்ருதிவி சுண்டுவிரலிலும், அப்பு மோதிர விரலிலும், தேஜஸ் நடுவிரலிலும், வாயு ஆள்காட்டி விரலிலும், ஆகாசம் பெரு விரலிலும் இருப்பதாக நம் சாஸ்திரங்களின் கொள்கையானபடியால் அக்னி என்ற நடுவிரலாலும், ஆகாயம் என்ற பெருவிரலாலும் மருந்து கோலைப்பற்றி மருந்திடும்போது அக்கினியினால் மருந்திட்டதற்கு ஒப்பாகும் ஆகவே நோய்கள் அக்கினியினால் தகிக்கப்பட்டது போலாகும் என்று பொருள்படும்.

கண் வியாதிகளின் பிரகரணம்.

கண்களிலுண்டாகும் வியாதிகள் தொண்ணூற்றொன்று கண் மருத்துவ நூல்களில் சொல்லியிருப்பினும் அனைத்தையும் கண்டறிந்து பண்டிதம் செய்தவர் ஒருவரும் இல்லையென்று நான் சொல்லத் துணிவேன். ஆகவே எங்கள்குடும்பத்தில் நாங்கள் கண்டுணர்ந்து சிகித்ஸைசெய்த அனுபவத்தை மட்டும் யாம் சொல்லத் தொடங்குவோம்.

அக்கிரரோகம் (Blephritis and Angular Conjunctivitis)

கண்களில் ஏற்படும் முதல் ரோகம் அக்கிர ரோகமாகும். இது வடமொழிச்சொல். அதற்குத் தமிழில் "முதன்மையான" என்று பொருள் படும் இதன் லட்சணங்களாவன:-

மெய்க்காப்புத்துக் கண்ணில் மேனிமை கனத்துப்புண்ணும்
உக்கிரமாக நொந்து ஊறியே நீரும் பாயும்
சிக்கறத் தினவும் பீளை சினத்திடுமுகங்கள் தானும்
அக்கிர ரோக மென்றே அறிந்தனர் புலவர்தாமே (12)

(இ-ள்) கண்களின் மேலிமைகளின் மயிர்க்காலெல்லாம் (ரோமத்தின் அடிபாகத்தில்) சிறுசிறு கொப்பளங்கள் தோன்றி இமைகள் தடித்துச் சிறு வலியைக் கொடுத்துக் கண்கள் சுறுக்கமடைந்து, கண்ணீர் வடிந்து, பீளை சேர்ந்து வெகு கோரமாக நோக்காடடையும். தாங்கவொண்ணா அரிப்பும், கண்களில் சிறு சிவப்பும் தோன்றும். இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்றபின் இமை மயிர்க்காலிலுள்ள கொப்பளங்கள் பழுத்து உடைந்து, சருகடைந்து தோல் உரியும். இமைகளிலேற்பட்ட வீக்கம் சற்று வாடும். நோய் தீர்ந்தது என்று பிணியாளன் சந்தோஷப்படு முன்னம் மறுபடியும் முன்போல் கொப்பளங்கள் தோன்றும். இது மிகக்கொடிய நோயாகும். அதனால்தான் இந்நோய்க்கு "அக்கிர ரோகம்" என்று ஆன்றோர்கள் பெயர் இட்டனர் போலும்.

சிகித்ஸை:- இந்த ரோகம் கண்களிலிடும் மருந்துகளினால் மட்டும் தீருவதில்லை. "மஹாசந்தனாதித்தைலம்" என்று பெயருள்ள ஒரு தைலம் எங்கள் குடும்பத்தில் செய்வதுண்டு அதைத்தயாரித்து இரண்டு அல்லது மூன்று முழுக்குகள் போடப் பார்த்திடும் நோயுந்தானே அதைச் செய்யும் விதத்தை ஔஷதப் பிரகரணத்தில் காண்க.

அமரம்.—

கதிக்கு மிமையிற் சதை வளர்ந்து கண்ணும் மூடித்திறவாது
பதிக்கும் விழியில் பரந்துகுத்திப் பலவாய் நீரும் பீளையிடும்
மதிக்க மேவரை நோக்கிதாம் மலர்ந்த பூப்போல் சிவந்திருக்கும்
அதிக்கும் குணங்களிவைதானும் அமரமென்றே அருளினால்(13)

இந்நோய் ஐந்து வயதிற்குட்பட்ட ஆண் பெண் குழந்தைகட்குவரும் ஓர் கொடுமையான நோய். இதில் இமைகள் தடித்து அவைகளினுட்புறத்தில் சதைவளர்ந்துவரும். கண்களை மூடும் சதை கனத்திருப்பதனால் கண்கள் தானாகவே திறக்கும் தன்மையற்றுப்போம். விழிஎங்கும் பரவின குத்தல்வலி ஏற்படும். பலவகையான நீரும் வெளிப்படும். 'பலவாம் நீரும்' என்றதனால் பலவகையான நீராவது வெண்ணீரும் செந்நீருமே, வெண்ணீர் என்பது சீழாகும், செந்நீராவது இரத்தம். ஏராளமாகப் பீளைதோன்றும், யாரையும் பார்க்க முடியாது. அன்று மலர்ந்த சிவப்பு நிறமுள்ள பட்பத்தின் உட்புறம்போல் சிவந்திருக்கும்.

சிகித்ஸை:- இதற்கு ஒரு அவுன்ஸ் சுத்த ஜலம் அல்லது மழை ஜலத்தில் 1 வராகனெடை படிக் காரத்தையதிலிட்டு ஒரு பாத்திரத்திலூற்றி அனலில் வைக்க ஜலம் கொதித்து சீனுக்காரம் கரைந்த பின் துணியினால் வடிக்கட்டி கெட்டிக் கார்க் போட்ட சீசாவில் வைத்துக் கொள்ளவும். கல்சார்க் போட்ட சீசாவிலிட்டால் கார்க் பிடித்து விடுவதனால் எளிதில் திறக்கமுடியாது.

குழந்தையைப் படுக்கவைத்து, நன்றாய் பஞ்சை ஜலத்தில் நனைத்து வடிந்து கிடக்கும் கரைகளையெல்லாம் போகும்படி தேய்த்துத் துடைத்து விட்டு ஒரு சிறு கோகர்ணத்தில் ஷை மருந்தை வார்த்துக்கொண்டு குழந்தைக்குச் சிரமமில்லாமல் மேலிமையும் கீழிமையும் இழுத்துத் திறந்து கொண்டு கண்களுக்குள்ளிட்டு இரு இமைகளையும் நன்றாக அசைத்து விடவும். பிறகு குழந்தைகளுக்குடையவர்கள் நாகரீக முள்ளவர்களாக இருந்தால் அவர்களிடத்தில் மருந்தைக் கொடுத்துச் சிறிது பஞ்சையும் கொடுத்து ஒரு பீங்கானில் மருந்தை வார்த்துக் குழந்தைகளின் கண்களுள் ஒரு மணிக்கொருதடவை துடைக்கச் சொல்லவும். சாயங்காலம்

இவ்வாறே கண்களுக்குள்ளே இம் மருந்தை ஒழுக்கிவந்தால் 2 அல்லது 3 நாட்களுக்குள் குழந்தை தானகவே கண்களைத் திறக்கும். சதைகளெல்லாம் கரைந்திருப்பதையும் காணலாம். கரைந்ததினுல் தான் இமையின் பாரம் குறைந்து கண்களைத்தானே திறந்தது என்பது துணிபு. சில சமயம் சீழ்வடியும். சிற்சில சமயங்களில் இரத்தம் பொழியும். இம்மாதிரி சில குழந்தைகளுக்குத்தான் வரும். அதைக் கண்டு அஞ்சவேண்டாம். கண்களைத் திறந்த பிறகு "சங்காதி மாத்திரை" யை முற்கூறிய விதிப்படி உரைக்கல்லில் ஒரு சொட்டு முலைப் பால் வைத்து வலமாயிழைத்து இரு கண்களிலுந் தீட்டி வரவும். கண் சிவப்பு சுத்தமாய் மாறிய பின் நல்லெண்ணெயும் ஒரு புளியாங் கொட்டை அளவுள்ள நெய்யையும் சேர்த்து நன்ருகக் காய்ச்சி ஆறிய பின் தலையில் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்விக்கவேண்டும். மறு நாள் அதன் கண்களைப் பரிசோதிக்கவும். சிவப்பு இருந்தால் இன்னும் சில நாட்கள் சங்காதி மாத்திரையைக் கண்களிலிடவும். "மலர்ந்த பூப் போல்" என்பதற்கு மாருகச் சில குழந்தைகட்கு செங்கருப்பாயிருக்கும். அதனுல் அந்த ரோகம் வெகுநாட்பட்டதென்று அறிந்து கொள்ளவும். அதற்கு இம் மருந்து மாத்திரம் போதாது. அதற்குச் சரவண விதிப் "பிரயோகம்" செய்தல் வேண்டும். சரவணம் என்பது தர்ப்பை அல்லது நாணல் புல். பொதுவாக இதற்குப் பெயராக விருப்பினும் எவ்வகைச் சுணைப்பத்திரங்களுக்கும் "சரவணம்', என்று பெயர். அவைகளாவன: பவளமல்லியிலை, மூங்கிலிலை, பராஇலை, கையாந்தகரை இவைகளுள் சில பத்திரங்களின் சுணை அழுத்தமாக இருது. அவைகளைக் கொண்டு நாம் சரவண விதிப் பிரயோகம் செய்தால் பத்திரத்திலுள்ள சுணை நீங்கிச் சதையில் ஒட்டிக்கொள்ளும். பிறகு வியாதி இரட்டித்துக் குழந்தைகளை துன்புறுத்தும். ஆகவே பவளமல்லி இலை, பரா இலை இவைகளிலொன்றைக் கொண்டுதான் சிகித்ஸை செய்வது உசிதம்.

செய்முறை:—சிவப்புத் துணியொன்றை யெடுத்துக் கசக்கி வெயிலில் உலத்திக் காய்ந்தபின் பட்டுப்போல் மிருதுவாய் வைத்துக் கொள்ள வேண்டும். குழந்தையைப் படுக்கச் செய்து மேலிமையைப் புரட்டி வைத்துக்கொண்டு பவளமல்லியிலை, பராயிலை இவைகளிலேதேனும் ஒன்றின் சுணைப்பக்கம் மேலே வரும்படி மடக்கி வைத்துக்கொண்டு ஓரிடத்தில் எள்ளளவு கீவிவிட்டு (கீறி) (அறுத்துத் தேய்க்காமல்) இமையை மூடிக் கட்டை விரலினுல் அமுக்க ஏராளமாகக் கருநிறமுள்ள இரத்தம் வெளிவரும். பொழியப் பொழியச் சிவப்புத் துணியால் ஒத்திவிடவேண்டும். சிவப்புத் துணியோடு இரத்தம் கலந்து கொள்வதால் குழந்தையின் பெற்றோருக்கு அதைப் பார்க்கப் பயமிராது. வெள்ளைத் துணியோவெனில் பயந்து மயங்கிவிடுவார்கள். இப்படியே மறு கண்ணிற்கும் செய்யவேண்டும். லேசான சுணையுள்ள பத்திரங்களைக் கொண்டு

இக்கிரியையைச் செய்யக்கூடாது என்பதைத் திரும்பவும் இங்கு உரைக்கிறேன்.

நாம் ஒழுங்காகச் சரவண விதிப் பிரயோகம் செய்த போதிலும் பகலில் 2 அல்லது 3 தடவை வெள்ளைத் துணியைப் பந்தாகச் சுருட்டிக் கொண்டு அனலில் காட்டி ஒத்தடம் கொடுக்கவும். அப்போது தான் கண்களில் வீக்கம் காணாது. பின்னர், 2 நாட்கள் சென்ற பின் கண்களைப் பரிசோதித்து சிவப்பு இமையினுட்புறமுள்ள சதை முதலியவைகள் நீங்கிவிட்டதா என்று அறிந்து, அப்படி ஏதேனும் இருந்தால் சங்காதி மாத்திரையைப் பிரயோகித்து அனுப்பி விடவும். சிறு பிராயத்தில் ஏற்படும் கக்குவான் போல் இது ஒரு முரட்டு வியாதியாகும். சங்காதி மாத்திரையைத் தயாரிக்கும் முறையை ஔஷதப் பிரகரணத்தில் கண்டு கொள்க.

கண்ணோய்

இந் நோய் மேல் காற்று அடிக்கும் காலங்களில் வரும். மாம் பழத்தை மிகுதியாய்ச் சாப்பிட்டாலும் வரும்.

"எந்நாளும் வாராது காற்றுகாலம் எடுக்குமேவலிதானும் இமை
யும் வீங்கும்
புண்ணாகும் நீர்ப்பீளை யுறங்கொட்டாது புதுமையாய் மூன்றுநாள்
போகநோகும்
விண்ணோக்க வொட்டாது பட்சமொன்றில் விதமாகத் தீருமிது
தானுமென்று
கண்ணோவுக்கு குறுகுணங்களிவைதானென்றும் கருதினர் புவி
மீதில் கண்டுதானே"

(இ-ள்) மற்ற பருவங்களில் இந் நோயுண்டாகாமல், காற்று காலங்களில் கண்களில் வலியுண்டாகி இமைகள் வீங்கிப் புண்ணாகி நீர் பீளை தோன்றி இரவிலே உறக்கங் கொள்ளாமல் 3 நாட்களுக்குப் புதுமையாகத் துன்புறுத்தும். இதன் குணத்தை இன்னதென்று அறியாத பாமரமக்கள் ஒரு பட்சம் (15 நாட்கள்) சென்ற பின்னர் தான் குணமடையும் என்பதை அறியாமல் தங்களுக்குத் தோன்றியவற்றையெல்லாம் நாமக்கட்டியையிழைத்துக் கண்களைச் சுற்றிப் போடுவதும், கடுக்காயை யிழைத்துப் போடுவதும், நந்தியாவட்டைப் பூவைக் கசக்கிப் பிழிவதும், நெருஞ்சிச் சாற்றைக் கண்களுள் ஒழுக்குவதும், கோழிமுட்டையை யவித்துக் கட்டுதல் முதலான சிகித்ஸைகளையெல்லாம் செய்துகொண்டு

கண்களைக் கெடுத்துக் கொள்கின்றனர். ஜ்வரத்திற்குச் சரிவரப் பண்டிதம் செய்யாவிட்டால் அது ஜந்நிக்கு இடமாவது போல் கண்கள் கெடுவதற்குக் கண்வலியே முதற் காரணம். ஆகவே கண்களில் சிறு சிவப்புத் தோன்றினாலும் பக்கத்திலுள்ள கண் வைத்யரையடுத்துப் பண்டிதம் செய்து கொள்ளல் வேண்டும்.

சிகிந்ஸை:—'சங்காதி மாத்திரையைப்' பிள்ளைப்பாலிலிழைத்து இட வேண்டும். வ்யாதி கடுமையானால் நெற்றியில் அடியில் கண்ட பத்தைப் போடவும்.

"சோற்றுப்பத்தும்திருநீறும் தோகையனையாள் மூலைப்பாலும்
வேற்றுப்புறத்தைத் துடைத்துவிட்டு வேறுகலந்துப் புறந்திழைத்து
காற்றுப்படாமல் வீற்றிருந்து கண்ணைச்சூழ வரைந்தாக்கால்
தோற்றுப்போகும் கண்ணோவும் சொன்னார் முனிவர் சொன்னரே."

(இ-ள்) ஓர் செப்புத் தாம்பாளத்தைக் குப்புறக் கவிழ்த்து அதில் தோன்றும் குழியில் சோற்றுப்பருக்கையைச் சிறிது வைத்து அத்துடன் வடிக்கட்டின விபூதி சேர்த்து வைத்து, மூலைப்பாலைச் சிறுகச் சிறுகச் சேர்த்து ஒரு செப்புச் செம்பின் அல்லது தாமிரச் செம்பின் அடிப்பக்கத்தால் சோற்றுப்பருக்கை நன்ருக நசுங்கும்படி பலமாகச் சுற்றி இழைக்கக் கருமையான களிம்பு தோன்றும். ½ மணி நேரத்திற்குக் குறையாமல் இழைத்தால் வண்டுபோல் கருமை நிறமாயிருப்பதுடன் ஒரு வித பளபளப்பும் அதில் தோன்றும். அச்சமயத்தில் அதை வழித்து ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு நோயாளியை இரவில் பால் சாதம் சாப்பிடச் செய்து, படுக்கப்போகுமுன் இப் பற்றை நெற்றியிலிருந்து கன்னம் வரை வளைவாகக் கட்குழியை நீக்கி விட்டு ஒரே சீராகப் போடவும். பின்பு நோயாளியைக் காற்றிலிறுத்திப் பற்று காய்ந்தவுடன் படுத்துக் கொள்ளச் செய்யவும். காலையிலெழுந்து பல் தேய்க்கும் போது பற்றை நீக்கி விட்டு வைத்யனிடம் செல்லவும். இவ்வாறு கண்ணிலிடு மருந்துடன், புறவளையமும் இட்டு வர இவ் வியாதி நீங்கி சௌக்கியத்திற்கு வரும். பற்றை இரவிலிடுவது தான் சிலாக்கியம்.

அன்ன கோபம்

"கனத்ததோர் நயனமுள்ளே கனலெழு லெரித்து விம்மி
உனத்தமாம் விழிபுடைத்து உலையினில் மெழுகுபோலச்
சினத்தது கண்ணும்நொந்து சிவந்துதா னருகிற்ருனல்
அனத்தயா மன்னகோபம் அறிந்துநீ மருந்துசெய்யே

(பொ-ரை) கண்களுக்குள் [illegible] கண்ணின் உள்ளிவிட்ட மெழுகு உருகுவது போல் உணர்ச்சி உண்டாகும். சிவப்பு நிறைந்திருக்கும். கண்ணில் [illegible] வலி தோன்றும். இந் நோய்க்குத் தக்க சிகிச்சை செய்யாமல் கண்களுள் கண்டவற்றைப் [illegible] அன்ன கோபம் என்ற இந்நோய் அனர்த்தமாக முடியும். இதற்கு [illegible] மருந்துகளைப் போட்டு சௌக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆதலால் நான் "அனர்த்தமான அன்ன கோபம் மருந்தால் [illegible] செய்யே," எனக் கூறியுள்ளார்.

சிகிச்சை:-விபாதி இவ்வளவு கடுமையானதும் பயங்கரமானதும் இருப்பினும் எமது [illegible] முனிவர் ஒரு மருந்தினாலும் [illegible] நல்ல [illegible] காட்டியுள்ளார். [illegible] மாத்திரையை [illegible] கண்களில் இட்டவும்.

பற்று விபரம்

[illegible] நேர்ந்து [illegible]
[illegible] கட்டிப்பிடித்து—[illegible]
[illegible]
[illegible].

(பொ-ரை) நோய் மெல்லியதாகவும் [illegible] நாயும் [illegible] கூடியவரை [illegible] காணப்படும் ஒரு எலுமிச்சம் பழத்தை [illegible] காம்பைப் பற்றியிருக்கும் மேல் பக்கத்தின் [illegible] அரைத்துவிட்டு அதில் இரும்பு அசப் பொடியைச் [illegible] ஒரு [illegible] சுத்தமான பொடியுடன் [illegible]. இவ்வாறு போதுமான [illegible] பொடி சேர்த்தபின் [illegible] துணியால் [illegible] நான்கு [illegible] கட்டிவிடவும். கண்ணின் மருந்தை விட்டபின் ½ மணி நேரம் சென்று எலுமிச்சம் பழத்தின் [illegible] கையில் பிடித்துக்கொண்டு மருந்துள்ள [illegible] ஏற்றிச் கண்களில் [illegible] விழாமல் கட்டு [illegible] பற்றை இடவும். இவ்வாறு 2 அல்லது 3 நாட்கள் செய்யவும். இப் பற்றைத் தயார் செய்யும் விதம் வேறொருவருக்கும் தெரியக்கூடாது. இப் பற்றிலிருந்து வடியும் [illegible] கண்களுள் விழாவண்ணம் [illegible] இடவும்.

நாகப்படலம்

இந்நோய் கண்களில் தோன்றினல் அப்பிணியாளன் சிறிதேனும் சொத்துடையவனுக இருப்பான். ஏனெனில் ராஜ சின்னங்களில் ஒன்றுன "செவ்வரி" என்ற இனத்தைச் சேர்ந்தது இது.

கடைக்கண் ணிருபுறத்தில் காணவேசிவப்புத் தோன்றில்
துடைசதை போலேவந்து சோதியைத் தின்னுநாளில்
அடைந்திடும் விழிகள் தன்னில் அதிகநீர்த் தினவுமுண்டாம்
நடைபடி குணங்க ளெல்லாம் நாகமாம் படலமாமே.

(இ-ள்)

கடைக்கண் என்பது மூக்கின் பக்கத்திலுள்ள சந்திப்பிற்கும் காதுப் பக்கத்தில் காணப்படும் சந்திப்பிற்கும் பெயர்களாகும். ஆகவே "கடைக்கண்ணிருபுறத்தில்" எனக் கூறினர். மேற்படி பக்கங்கள் ஏதேனும் ஓரிடத்திலிருந்து சதை முளைத்தெழுந்து முளைத்த இடம் சிறுத்து பின்பு அகலமாக ஆகி வெள்விழியைக் கடந்து கருவிழியில் பாய்ந்து கருவிழியின் மத்தியிலுள்ள பாவையைச் சமீபித்துவிட்டால் எப்பொருளைப் பார்த்தாலும் பிணியாளிக்கு ஒன்று இரண்டாகத் தோன்றும். வெயிலில் அலைந்தாலும், பசியினுல் வருந்தினுலும் கண்களில் சிவப்பு அதிகரிக்கும். இது பாவையில் பாய்ந்துவிட்டால் பாவையிலுள்ள நீரைத்தின்று கண்களைக் குருடாக்கும். கண்களில் அரிப்பும் தோன்றும். நீர்ப்பாய்ச்சலும் உண்டாகும். இவ்வாறு படர்ந்திருக்கும் சிவப்புசதையானது பனையின் நாறுபோல் மிக அழுத்தமாயிருக்கும். இதை ஊசியினுல் தூக்கினுல் கண்களைவிட்டுப் பெயர்ந்து வரும். இந்த ரோகத்திற்குச் சஸ்திரப் பிரயோகம் செய்வதுண்டு. சிலர் ஊசியினுல் இலகுவாய் கொத்தி இழுத்துக்கொண்டு கத்தரியினுல் கத்தரித்து விடுவார்கள். சிலர் மூக்கினடியில் கத்தியைச் செலுத்தி சஸ்திரப் பிரயோகம் செய்வதும் உண்டு. சிலர் போதுமானவரை கத்தரித்துவிட்டு மீதியுள்ளதை சிரஸின் ரோமத்தினுல் கட்டிவிடுவதும் உண்டு. மேலும் அது வளர வளரக் கத்தரித்து விடுவார்கள். தலை மயிர் எந்நாளும் கண்ணீரினுல் மடிக்காது. இத்தகைய துன்பங்கள் வேண்டாம். படலாதி மாத்திரைஎன்ற மருந்தை கண்களில் தீட்டிவர அது வெகு எளிதில் நாறு போன்ற சதையைத் தின்றுவிடும். தாமிராதி மாத்திரையும் நல்லது. படல பஸ்பத்தையும் இடலாம். ஆனல் படலபஸ்பம் இட்டால் சிறிது உறுத்தலுண்டாகும். அது எம்மிடம் அனுபவப்பட்டிருப்பினும் அதை இடுவதில்லை. ஆகவே மாத்திரைகளைப் பிள்ளைப்பாலில் இழைத்துத் தீட்டிவர இந்நோய் ஒழியும்.

வெள்ளைப் படலம்

கண்ணினில் வெள்ளைதன்னில் கலந்தோர் பாலினுடை
உண்ணியே விழிக்கும்போது உறுத்திடும் உரத்துவைத்து

நண்ணிய பளிங்குபோல நலமயிர் புகைத்துகாட்டும்
வெண்ணிய மதிமுகத்தாய் வெள்ளையாம் படலமாமே.

(இ-ள்)

பாலைக்காய்ச்சி உரைக்குத்தி வைத்தால் அதன் மேலே உண்டாகும் ஆடையைப்போலக் கண்களில் சதை வளர்ந்து கண்களை மூடித்திறக்கையில் உறுத்தும். சிலருக்குப் பளிங்கைப்போல் வெண்மை நிறமாகவும் சிலருக்கு மயிரைப்போல் கறுத்துமிருக்கும். பார்வை குறைவடையும். இத்தகைய குறிகள் காணப்படில் இது "வெள்ளைப்படலம்" ஆகும். இந்நோய் நாகபடலத்தைப்போல் அவ்வளவு கொடுமையானதல்ல. ஏனெனில் இது சதையினலான ஆடையைப்போல் படர்ந்திருக்குமேயல்லாது நாகபடலத்தில் காணப்படுவதுபோல் நாறு போன்ற வளர்ச்சியல்ல. நாகபடலம் கரைவதற்கு மிகநாட் செல்லும். வெள்விழிப்படலம் வெகு எளிதில் கரைந்து பார்வை மந்தத்தையும் நீர்ப்பொழிதலையும் நீக்கி விடும்.

சிகிச்சை:—படலாதி அல்லது தாமிராதி மாத்திரையை முலைப்பாலில் இழைத்துக் கண்களில் இடவும். வியாதியின் கொடுமைக்கேற்றபடி நாள் பேதங்களில் கரைந்துவிடும். சந்தேகமில்லை. சௌக்யமானபின் அல்லது சிகித்சை ஆரம்பத்திலோ பிருங்காமலகத் தைலத்தைத் தேய்த்து மூழ்கிவரக் கண்ணிலிடு மருந்திற்கு மிக்க உதவியாயிருக்கும். இதிலோர் சங்கையுண்டு. அதாவது வெற்றிலையும் பாக்கும் மட்டும் தின்றால் சிவக்காது. பாக்கும் சுண்ணம்பும் சிவக்காது. எப்படி இம்மூன்றும் ஒன்று சேர்ந்தால்தான் சிவப்பு நிறம் உண்டாகிறதோ அதைப்போல் மருந்திலிருக்கும் சில சரக்குகளின் வேகமும் தைலத்தின் குளுர்ச்சியும் ஒன்று சேர்ந்தால்தான் ரோகம் மடியும். இப்பெரு நோய்களெல்லாம் சீக்கிரத்தில் சௌக்யமாகவேண்டுமென்றால் அது இயலாது. அவைகளுக்கான நாட்கள் சென்ற பின்னர்தான் குற்றமற நீங்கும். காசு சிலவிற்குக் கசந்தாலும் முடியாது.

இரத்தப்படலம்

கருத்திடுங் குமுறுங்காற்றல் கனத்திடும் பீளைபாயும்
எரித்திடுங் கண்களிரண்டும் இரத்தமே வீழ்ந்துகாட்டும்
நெரித்திடும் பிடரிஉச்சி நீங்கிடாக் குத்துகாணும்
இரத்தமாம் படலமென்று இயம்பினர் இனிதுமாதோ.

(இ-ள்) சரீரம் கருத்திருக்கும். வாயுவினால் சரீரத்தில் பாரமேற்படும். கண்களில் பீளைசாறும். எரிச்சலுண்டாகும். கண்களில் இரத்தம் இறங்கிச் சிவக்கும். பிடரி, உச்சி, தலை முதலான இடங்களில் பொறுக்கமுடியாத வலியேற்படும். மேற்கூறிய செய்யுளில் இந்த நோயின் விவரம் கூறப்பட்டிருப்பினும் எமது அனுபவத்தில் கண்ட குணங்களை

என்று கூறுவோம். சிறு பிள்ளைகளுக்கு வரும் கக்குவான் இருமல் ரோகமுள்ள குழந்தைகட்குந்தான் இது அதிகமாகக் காணும். கருவிழிக்குக் கீழே சிவப்பு நிறமுள்ள ஒரு கோடுபோல் தோன்றி நாளடைவில் அது விசாலித்து வந்து வெள்விழி முழுவதும் பரவி உயர்ந்து சிவப்பு நிறமாகி நாட்கள் செல்லச் செல்லக் கறுத்துவரும். மேலும் குழந்தையானது விழி பிதுங்கும்படி ரொம்பவும் கடுமையாக இருமும் போது கண்களிலுள்ள வலைபோல் பின்னப்பட்ட இரத்தக் குழாயிலுள்ள இரத்தம் வெளியே பிதுங்கி வெளிப்பட்டு "சிருங்கை" என்ற வெள்ளைச் சவ்வுக்குள் (Sclera) அடங்கி வெளிப்படாமல் நின்று சிவந்து காட்டுகின்றது. இதற்குக் கண் மருந்து மாத்திரம் போதாது. உள்ளுக்கும் அவசியமாக மருந்து கொடுத்தல் வேண்டும்.

சிகிச்சை :—கறுப்பு மிளகு, அரிசித்திப்பிலி, கொட்டைப்பாக்கின் மெல்லிய சீவல் இம்மூன்றையும் சமவெடையெடுத்துத் தனித்தனியே கரியாகும் வண்ணம் வறுத்துக்கொண்டு மூன்றையுஞ் சேர்த்து அம்மியிலோ அல்லது கல்வத்திலோ மயமாகத் தூளாக்கி வடிக்கட்டிக் கொள்ளவும். பழைய தேய்ந்த செருப்பு ஒன்றை எடுத்து அடித்தோலை அறுத்து ஓர் ஓட்டில் வைத்து 10 வராளியில் புடமிடவும். அதையெடுத்துக் குழியம்மியில் வைத்து நுணுக்கச் சிவப்பாகும். இதை வஸ்திரகாயஞ் செய்தெடுத்து, முற்கூறிய சரக்குகளுக்குச் சமவெடை நிறுத்துக்கொண்டு கல்வத்தில் எல்லாவற்றையும் இட்டு ஒன்றாக்கி, மூவிரல் கொண்ட அளவெடுத்துத் தேனுடன் குழைத்துக் தினம் காலையிலும் மாலையிலும் கொடுக்கவும்.

பத்தியம் :— வாயுபதார்த்தம், நீர்ப்பண்டம், புளிப்பு பதார்த்தங்கள் முதலியவைகளை நீக்கிவிடவும். நெய் கூட்டிக் கொள்ளவும்.

மற்றொரு மருந்து :— வில்வம் 21 தளமெடுத்துக்கொண்டு அவைகளின் காம்பை நீக்கிவிடவும். 21 தளத்தில் 63 இலைகளாயின. அதன் நிறைக்குச்சமம் துளசிதளமும், வேப்பங் கொழுந்தும் சேர்த்துக் கொண்டு தண்ணீரில் போட்டுக் கசக்கி, பூச்சிநரம்பு போக அலசிவிடவும். பின்பு அம்மியைச் சுத்தமாகக் கழுவி அதில் வைத்து நன்கு மைபோலரைத்துப் பசுவின் பாலில் குழப்பிக் காலையில் ஒரு வேளை மட்டும் கொடுக்கவும். மேலே சொன்ன மருந்தைத் தேனில் குழைத்துச் சாப்பிட்டபின் இப்பாலையும் கொடுக்கலாம். சாயங்காலம் செந்தூர மருந்து மட்டும் கொடுத்தால் போதுமானது. இவைகளால் கக்குவான் குறையும். இது குறையவே சூரிய சந்திரர்களைப் பிடித்த ராகு கேதுகள் எவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக விட்டு விலகுகின்றனவோ அதேபோல் சரீர சீதோஷ்ணத்திற்குத் தக்கபடி வியாதியும் விலகச் சிறுகச் சிறுகக் குறைவடைந்து இரத்தப்படலம் நீங்கி ஒளியுள்ள கண்களாகும். பார்வை குன்றாது. கண் வலிக்கு மருந்தோவெனில் "காசகுளிகை"

யாகும். ஒரு சொட்டுத்தேனைச் சந்தனக் கல்லிலிட்டு அதிலிழைத்துப் பின்னர் கண்களில் பிரயோகிக்கவும். வழுவழுப்பான கல்லில் இழைக்க இழுதுவராது.

பில்லம்

பில்லம் மூவகைப்படும். இதில் அநேக வகையிருப்பினும் அவைகள் எல்லாவற்றையும் இங்கு கூறுவது அவசியமில்லை. ஏனெனில் அவைகளைத் தெரிந்துகொள்ள அகஸ்தியர் நயன விதி—500 என்ற புத்தகத்தைப் பார்க்கவும்.

பில்லம் என்பது வடமொழிச் சொல்லாகும். மூவகைப் பில்லங்களாவன (1) சதைப் பில்லம் (2) நீர்ப்பில்லம் (3) வரள் பில்லம்

சதைப் பில்லம்

இமையைக்கடுத்து மேல்கனத்து இடுக்கி நீரும் பீளையிடும்
குமையைச் சிவந்து வெளுப்புண்டாம் கூசிவிழியும் கீழ்நோக்கும்
சமையத் திரண்டு புருவம்கீழ் சதையும் வளர்ந்து உறுத்துவிக்கும்
நிமையத் திறக்கில் சதைமூடும் நீர்ப்பில்லம் ஈதெனலாம்.

(இ-ள்) இமைகளில் கடுப்புண்டாகித் தடித்துக் கண்கள் சுருக்கங் [illegible]ண்டு கண்ணீரும் பீளையும் அதிகமாகும். ஒருவேளை ஒரு பிரயோக [illegible] செய்யாமல் போனாலும் தனக்குத்தானே வெளுப்புண்டாகிவிடும். [illegible]ளில் கூச்சம் அதிகமாவதால் நிமிர்ந்து பார்க்க இயலாது. [illegible]மையைப் புரட்டிப் பார்க்கும்போது உள்ளே அமரத்திற்கு எவ் [illegible] சதை வளர்ந்திருக்குமோ அவ்வாறு வளர்ந்திருக்கும். இந்த [illegible]த்திற்கும் "சரவணவிதிப்" பிரயோகம் செய்யலாம். செய்யுள [illegible]ல் நீர்ப்பில்லம் என்றிருப்பது ஏதோ தவருக எழுதப்பட்டிருக் [illegible]ன்று தீர்மானிக்கிறேன்.

[illegible]கித்சை :—இவ்வியாதி மூலத்தில் கனலேறி அவ்வனல் கண்களில் [illegible] உண்டாகிறது என்பது திண்ணம். இதற்கு முதல் சிகித்சையாக [illegible]ரத்தை தணித்துக் கொள்ளவேண்டும். எவ்வாறெனில் பவழம், [illegible] இவைகளின் பற்பத்தை ஏராளமாய்ச் சேர்த்துத் திரிகடிப் [illegible]ணம் எடுத்துக் காலையில் வெண்ணெயிலும் சாயுங்காலம் [illegible]லும் கூட்டி வரவேண்டும். "பிருங்காமலகத்தைலம்" தேய்த்து [illegible]வும். கண்களிலிடும் மருந்தோ "தாம்ராதி மாத்திரை" யாகும். [illegible]ப் பிள்ளைப்பாலிலிழைத்துக் காலையிலும் மாலையிலும் பயறள [illegible]துக் கண்களுள் இடவேண்டும். காலையில் சூரியோதயத்திற்குப் [illegible]தான் இடுதல் நலம்.

நீர்ப்பில்லம்

கருகிய இமையினுள்ளே கதிர்ந்ததுர் மாமிசம்போல்
அருவியே யுறுத்தி நொந்து அதிகமாய் சிவந்து கூசும்
மருவிய பூவுந்தோன்றும் மாறுதே பீளைபாயும்
பெருகிய நீருமுண்டாம் பில்லமா மென்றுசொல்லே.

(இ-ள்) மேலிமையைப் புரட்டிப் பார்க்கத் தடித்த சதை வளர்ந்திருப்பதால் தூசி விழுந்ததுபோல் கண்களை அருவியும், உறுத்தலுடன் நோக்காடடைந்தும் சிவப்புடன் கூச்சத்தையுண்டுபண்ணும். கருவிழியின் மேல் சிறு புள்ளிபோல் பூவும் காணும். ஓயாமல் பீளை கட்டும். ஏராளமாகக் கண்ணீர் வடியும். இவை "நீர்ப்பில்ல" ரோகத்தின் இலட்சணங்களாம். இதற்கும் சதைப் பில்லத்திற்குச் சொல்லியவாறு சிகித்ஸைகளைச் செய்யவேண்டும்,

வரள் பில்லம்

இந்நோய் தேகத்தில் அளவிற்கு மேற்பட்ட உஷ்ணமேறிக் கண்களைத்தாக்கி உண்டாகும். கண்களின் இமைகளைப் புறட்டிப் பார்க்கையில் வரகரிசியைப்போல் சிறு சிறு கொப்புளங்கள் காணும். அதனால் கண்ணில் உறுத்தல், சிவப்பு, நீர்வடிதல், பீளைசேரல் முதலிய துன்பங்களுண்டாகும். இந்நோய்க்கு ஆங்கிலத்தில் "Granulated lids or Trochoma" எனப்பெயர்;

சிகிச்சை :—தாமிராதி மாத்திரையைப் பிள்ளைப்பாலிலிழைத்து இமைகளைப் புறட்டி மருந்து கண்களில் பரவும்படி தீட்டிவந்தால் சதை, நீர்ப்பில்லங்களைப்போல் நாட்கள் நீடிக்காமல் வெகு எளிதில் இதுவும் குணமாகும். இதற்கும் முற்கூறிய "தைலம்" மிக முக்கியம் என்பதை அறிக. எனது அனுபவத்தில் இக் கொடிய நோய் பிராமண ஸ்திரி புருஷர்களுக்கும், மகம்மதிய ஸ்திரிகளுக்குமே அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிகிறது. பிராமணர்கள் அதிகமாக ஹோமாதிகளில் ஈடுபட்டிருப்பதாலும், நீரில் முழுகுவதனாலும் ஏற்படுகிறது என்று தெரிகிறது. ஸ்திரிகளுக்கோவெனில் அதிகமாகப் பட்டாடை உடுத்துவதாலும், ஈரமான புடவை கட்டிக்கொள்வதனாலும் ஏற்படுகிறதோ என்பது என் ஐயம். மகமதியர்களோ அதிகமாக மீனிறைச்சி, மாம்ஸம் முதலானவைகளைச் சாப்பிடுவதால் ஏற்படுகின்றது என்று தீர்மானிக்கிறோம்.

அறுபது அல்லது எழுபது வருடங்களுக்கு முன் தக்ஷிண தேசத்துத் தமிழ் பிராமணர்கள் வீட்டில் குழந்தைகள் பிறந்தால் பெண் குழந்தைகளின் நஞ்சுக் கொடியை அறுத்தான பின் ஊசியைப் பழுக்கச் செய்து இரு புருவங்களின் மேலும் சுட்டு விடுவார்கள். ஆண் குழந்தையாயிருப்பின் வயிற்றில் தொப்புளுக்கு மேல் 3 கோடாகச் சுட்டுவிடுவார்கள்.

இலைகளுக்குக் கிரணம் என்றெவென்றால் பெண்களுக்குச் சூதிகாதவை யில்லாரோகம் வராது என்றும் ஆண்களுக்கு வயிற்று நோய்கள் வாராது என்றும் கூறுவார்கள். சில சமயங்களில் ஆண்களுக்கு முழங் காலுக்குக் கீழும், கணுக்காலுக்கு 4 விரற்கடை யளவில் இரு கால்களி லும் சுட்டு விடுவதும் உண்டு. இம்மாதிரி கிரியைகளுக்கு "அறுகு வைத்தல்" என்று பெயர். ஏன்சேர்கள் ஆட்டுக்கோல் என்ற இரும் பாயுதத்தைக் கொண்டு நெருப்பில் பழுக்க வைத்துச் சுட்டு விடுவது வழக்கம். எப்படியாயினும் அதைத் தழுந்து விட்டு நரம்புஸ்தானங்களைக் கண்டு பிடித்து மஞ்சள் பூசி சுட்டு விடும் வழக்கத்தை 3 தலை முறைகளாக ஏற்படுத்திக்கொண்டோம். சிலர் புண் மருந்துகளைக் கொண்டு புண்ணாகும்படி செய்து ஆற்றி விடுவதும் உண்டு. இதனால் வியாதி முற்றிலும் எடுபடுவதில்லை.

கட்டப்பட்ட பில்ல ரோகங்களுக்கு "இடபதி ஆரணம்" என்ற சிவதை வேர்ச் சூரணத்தை 15 நாட்களுக்கு ஒரு முறை பேதிக்குக் கொடுக்க வேண்டும்.

புழு வெட்டு

கீட்டியா நிமைவும் கூச்சம் நீர்வரு மிமையும் வீக்கம்
கூட்டிடும் பீளைசேரும் பருப்பிளை போலத் தோன்றும்
சாட்டியே மயிருதிர்ந்து சுற்சரை பக்கம் விழும்
காட்டுது மயிர்புழு வெட்டு கண்டவ ருரைத்தவாறே.

(இ-ள்) கண்களின் இமைகளில் அரிப்பும், கூச்சமும், கண்ணீர் வடிதலும், இமைகளில் வீக்கமும், பீளைகட்டுதலும், சிறு சிறு கொப் புளங்கள் போலும் பருப்பல குழிகள் தோன்றும். இமை ரோமங்க ளுதிர்ந்து சதை வளர்ந்து இரத்தம் பொசியும். இதற்கு ஆங்கிலத்தில் "Absence of eye lashes" எனப் பெயர்.

சிகிச்சை:—இதற்குகான வரு மையைச் செய்து பிரயோகிக்க இந் நோய் சுத்தமாக நீங்கி விடும். மை செய்யும் முறையை ஔஷதப் பிர கரணத்தில் காண்க.

நேத்திர சூலை

வானத்தில் வரும் மின்னுப் பளிப்புரு மத்தித்துத்தி
செயல்கெட விரணமுண்டாய்த் திரண்டுநீர் குத்தல்வீழும்
அபதியினை மறிந்துகொண்டு இவைவி ரோகமாற
அபலையர செப்பவுண்மை மருந்துகொ மறிந்து செய்யே (1)

கருமே வதைபோல விப்புண்டாய்க் கலந்துக்கண்ணை
சேருமே பரிக்குமாப்போல் நோவுடன் வலியுமுண்டாகும்
ஒருமே பலைத்துப் போட்டால் பின்கூட்டு உலர்ந்து காணும்
சாருமே விரவில் நோவு தானது மிகவுண்டாமே (2)

நேத்திர வாயுநின்று நெருங்கிய இடியுந்தாக்கி
மாத்திரக் கண்சிவந்து வலிந்திடுஞ் சிரவில் குத்தும்
கேத்திர கேதஞ் சூகம் நம்பவம் கீசமுற்றி
நீத்திடா காசம்போல மின்விழி குருடதாமே (3)

(இ-ள்) கண்களில் வாயுதங்கி புருவத்தில் குத்துவலி யேற்படும். கண்களில் விரணம் ஏற்பட்டிருப்பது போன்ற பிரமையுண்டாகும். மூக்கில் நீர் சுரந்து வடியும். கண்கள் சிவந்து, கண்களை வெளியே பிடுங்குவது போன்ற வலியும் அரிப்பும் உண்டாகும். கண்களில் நீர் பொழியும். அதை விரலால் தொட்டால் வெகு சீக்கிரத்தில் உலர்ந்து விடும். இரவில் வலி அதிகரிக்கும். கண்களில் சிவப்புடன் தலைவலியும் ஏற்படும். கேத்திரம், கேதம், சூகம், நம்பவம், கீசம் முதலான நிலைமைகளையடைந்து கண்கள் குருடாகும். இந் நோய் மிகக் கொடிய நோய்களில் ஒன்றாகும். நோயின் ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்தால் தான் குணமுண்டாகும். நாட்கள் செல்லச் செல்ல இந்நோய் கண்களை மறைத்துக் குருடாகும். கிரந்த கர்த்தா, கேந்திரம், சூகம், நம்பவம், கீசம் இவை போன்ற வ்யாதிகள் கண்களை மறைப்பது போல் மறைத்து விடும் என்கிறார். இப் பெயர்களை மதுரையையாண்ட வீரபாண்டியன் என்னும் அரசர் செய்திருக்கும் நூலில் காண்க. இவைகள் தற்போது வழங்குவதில்லை. கண்களிருண்ட பின்னர் இந் நோயை ஆங்கில வைத்தியர்கள் "glaucoma" என வழங்குவர். அதன் அர்த்தம் "கண்விழி கல்லைப் போன்றிருத்தல்" என்பது. நேத்திர சூலையிலும் அவ்வாறே இருக்கும்.

சிகிச்சை:—நோய் ஆரம்பமாயிருந்தால் தலையில் வலியிருக்கும் போது நெற்றியைக் கவனித்துப் பார்க்கில் நெற்றி நரம்புகள் புடைத்துக் காணும். வலியில்லாத சமயத்திலானால் கழுத்தில் துணியைச் சுற்றி முறுக்கி மூச்சை இல்லாதபடி பிடித்தால் தான் நெற்றி நரம்புகள் புடைக்கும். அச்சமயம் மூக்கிற்கு மேல் நெற்றியில் 2 விரற்கடையளவு இடம் ஈச்வரனின் இருப்பிடமானதால் அதை விட்டு விட்டு வலப்புறம் 3 இடங்களிலும் இடதுபுறம் 3 இடங்களிலும் சுட்டு விடவும். வலையில்லாமல் சோரகவுள்ள கஸ்தூரி மஞ்சள் கொம்பைத் தீபத்தில் பிடித்துக் கருக்கைக் கரையில் கோர்த்து விட்டு, பின் புறத்தில் வேறொருவனை இவத்தி நோயாளியின் கையைப் பிடித்துக் கொள்ளச் சொல்லியும் தீபத்திற் பிடித்த மஞ்சளை நரம்பின் மேல் வைத்திருக்கும் சுண்ணாம்புக் குறியின் பேரில் 2 நிமிஷம் வைத்து எடுத்து விடவும். இப் படியாக ஒரு குறிக்கு 2 தடவை சுட்டுவிடலாம். கைக்கருக்கைச் செய்யவும். பின்பு நோயாளிக்குச் சிறிது ஆகாரமும் பானமும் கொடுக்கவும். நெற்றியில் சுட்டுவதற்கு மேல் ஒரு பட்டியும் உள் பட்டியொன்றும் தயார் செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு வெற்றிலையைக் காலணா அளவுள்ளதாகக் கத்தரித்துக்கொண்டு, அந்த இலையினுட்

புறத்தில் முந்திரி எண்ணெய் ஒரு சொட்டுவைத்துச் சுட்ட இடத்தில்கட்டி விடவும், இவ்வாறு 6 இலைகளையும் ஆறு புண்களுக்கும் இட்டு உள் பட்டியை மேலே வைத்து நழுவாமலும் புருவத்திற்கும் மேலே இருக்கும் படியாக வைத்து, அதன் மேல் மேல் பட்டியை வைத்து இழுத்துப் பின் புறம் ஒன்றரை முடிச்சு இடவும். மறு நாள் வரச்சொல்லிக் கட்டுகளை யவிழ்த்து இலைகளை யெடுத்து விட்டு மறுபடியும் புது இலைகளைக் கத்தரித்து ஷை புண் தைலத்தை அதே விதம் வைத்து வேறு துணிகொண்டு இறுகக் கட்டிவிடவும். சில தேகிகளுக்கு 2 அல்லது 3 நாட்கள் சென்றபின்னர் சீழ் பிடித்து விடும். பின்னர் புண்கள் அது ஆறுவதற்கு முலாம் தடவி ஒட்டவும். சீழ் எதேஷ்டமாக வெளிவரும். இப்படியாகச் செய்து வர 10 அல்லது 12 நாட்களுள் இரணம் முற்றிலும் ஆறிவிடும். முலாம் செய்யும் விதத்தை ஔஷதப் பிரகரணத்தில் காண்க.

உள்ளுக்கு மருந்து:—வெட்டை, புண், கிரந்தி, சூலை முதலியவைகளைக் கண்டிக்கும் மருந்துகளுடன் "வாதகாச" தைலத்தையும் முழுகுவதற்குக் கொடுக்கவும். கண்களுக்குத் நாமிராதி மாத்திரை இடவும். சிலருக்கு வெள்ளையினால் மட்டும் இந்த நேத்திர சூலை ஏற்படும். அதற்குக் "கண்டுபற்பத்தைக்" கண்களில்விட நோய் அறவே நீங்கி ஸ்ரீ உண்டாகும்.

நத்தைப்படுவன்

இந்நோய் எமது அனுபவத்தில் 5 வயதிற்கு மேல் 19 வயதிற்குள் ...ட்ட பிள்ளைகளுக்குத் தான் உண்டாகிறது.

குறிகுணங்கள்:—கண்ணீர் விடாமல் பொசியும். கடைக்கண்களில் ...ந்துவலி யேற்படும். மேல், கீழ் இமைகள் வீங்கும். சீழ் போல் பீளை ...ா வெளிவரும். கண்களில் உறுத்தலும், சிவப்பும் அதிகரிக்கும். ...ண்களை விழிக்க இயலாது.

சிகிச்சை:—ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்ய வேண்டும், அது ...ற்றிப் பழுத்து உடைந்து சீழ் வெளிப்படுமே யானால் கண்களின் பார் ...வக்கு ஆதாரமான இடங்கள் கெட்டுப் போய்விட்டதென்ற தீர்மானம். ...ளக்யமானாலும் பார்வை வராது. ஆரம்ப நிலையிலே நோயிருந்தால் ...ர்வை கெடாது. "இரணசிங்கி மாத்திரை"யைப் பிள்ளைப் பாலி ...ழைத்து இமையின் மேல் பற்றுகப் போடவும். 2 அல்லது 3 நா... ...ள் குழந்தை கண்களைத் தானே திறக்கும். திறந்த பின் இம்மாத் ...ரயைச் சுத்த ஜலத்திலிழைத்துப் பயறளவு கண்களுக்குள்ளிடவும். ... மாதத்திற்குள் சுத்தமாகி விடும். பழுத்து உடைந்த கண்களுக்கோ ...மருந்தை பற்றாக இட்டுவர இமைத்தடிப்பு மெலிந்து கண்களும் ...க்கும். ஆனால் பார்வை இராது. உடைந்த கண்களில் சீழ் தங்கி ...வதால் பார்வை கெடும்.

வெள்ளெழுத்து

தமிழ் சாஸ்திர முறைப்படி 35 வயதுவரை வாதகாலமும், 35 மேல் 66 வரை பித்தகாலமும் அதற்குமேல் கபகாலமும் ஸம்பவிக்கிறது என்கிறபடியால் 35 வயது சென்றவுடன் இந்நோய் சாதாரணமாக ஆரம்பிக்கிறது. "தெளிவது ஒழியாகிறகும் திக்கிலே முப்பத்தைந்தில் ஒளியது புகைந்து சற்றே ஒதுங்கிடும் நாற்பத்தைந்தில்"

என்று அகஸ்தியனார் கூறுவதால் இந்நோய் சரீரத்திற்கேற்றபடியும், தொழிலுக்கேற்றபடியும் ஏற்படும். பித்தகாலத்தில் பித்தநீர் கண்களில் தங்கி, பித்தத்திற்கேற்ற நிறமான மஞ்சள் நிறத்தை பார்வை அடைகின்றது. அது மேலும் பற நிறமுள்ள எழுத்துக்களை மறைத்து வெண்மையாகும். இதற்கு ஆகசில உதாரணத்தை யெடுத்துக்கொள்ளவேண்டும். 35 வயதிற்குமேல் கண்விழி குவிந்து திரண்டு ஒரு நிலையடைந்தபின் அப்படியே ஆகிவிடுகிறது. இதற்கு இருபுறமும் குவிந்த கண்ணாடியைப்போட்டுக்கொண்டால் மறைந்த எழுத்துக்கள் புலப்படுகின்றன. சமீபப்பார்வையாகில் இருபுறமும் விரிந்து நடுவில் குழிவுள்ள கண்ணாடியைப் போட்டுக்கொள்ளவும். தூரப்பார்வை ஏற்படும். தூரப்பார்வை, கிட்டப்பார்வை முதலியன தோன்ற ஆரம்பித்தால் தக்க கண்வைத்தியர்களைக்கொண்டு கண்களை பரீக்ஷைசெய்து சரியான கண்ணாடியைப் போட்டுக்கொள்ளவும்.

சிகித்ஸை.

"அகத்திப் பழுப்புச்சாறு அப்பனே கண்ணிவிட
மந்தத்துவத்தைக் கேளுமினி மானே— சந்த்தில்
வெள்ளெழுத்தை நீக்கும விளங்கும் திரிபொழுதில்
உள்ளபடி சொன்னேனே முவந்து."

அதாவது மரத்திலேயே பழுத்த அகத்திப் பழுப்பைக் கொண்டுவந்து காம்புகளை நீக்கி இலைகளைமாத்திரம் எடுத்து, குழியம்மியைக் கழுவித் துடைத்து அதிலிட்டுக் குழவியினால் அரைத்துத் துணியிலிட்டுப் பிழியச் சாறுவரும். அதைச் சுத்தமான பீங்கானில் வைத்துக்கொண்டு செப்புக் கோலினால் நனைத்துக் கண்களிலிடவும். சொல்பநேரம் கண்களில் எரிச்சலுண்டாகிப் பிறகு குளிர்ந்துவிடும். இவ்வாறு 3 நாட்கள் கண்களிலிட வெள்ளெழுத்து தீரும். இம்மருந்தின் நீடித்த உபயோகத்தினால் நேத்திர காசநோய் ஏற்படும்.

பித்தகாசம் (Cataract.)

சினத்திடும் சிவப்பேயாகும் சிறகவே பீளை கண்கள்
அனத்திடும் பீளை தோன்றும் அதிகமாய்ச் சிவந்துகூசும்
சுனைத்தடஞ் சோனைமாறிச் சொரிதல்போல் நீரோதுவிக்
கனத்திடும் பைத்தியத்தின் காசமாய்க் கருதலாமே!!

கோபம்உண்டாகும்போது எவ்வாறு கண்கள் சிவக்குமோ அவ்வாறு சிவந்து கண்கள் சிறுக்கும். பீளை சேரும். கூச்சம் அதிகமாகும். சுனையிலிருந்து நீர் விழுவதுபோல் கண்ணீர் பொழியும்.

பார்வைப் புகைச்சலேற்படும். வெள்ளை விழியிலுள்ள நரம்புகளில் நீர் கோர்த்துக்கொண்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தால், கண்களில் வலி, புருவத்தில் குத்துவலி முதலியன உண்டாகும்.

"காசம்" என்பது வடமொழிச்சொல். தமிழிலோ மேல்நீர் என்றுதான் பொருள் கூறவேண்டும். இவை 8 வகைப்படும். (1)வாத (2)பித்த (3) கப (4) நீல (5) வால (6) மந்தார (7) குமரி (8) அக்கிரகாசங்களாகும். மேற்கூறிய வகைகள் கொஞ்சம் கொஞ்சமாக கண்களை மறைக்கும். இவற்றுள் பித்தகாசம் ஒன்றே சாஸ்திரசிகித்ஸைக்கு ஏற்றது. இந்நாசரோகம் ஆரம்ப நிலையிலிருந்தால் மருந்தினாலும் தைலத்தினாலும் தப்பித்துக்கொள்ளலாம். பக்குவமாகிவிட்டால் சஸ்திரசிகித்ஸையினால்தான் சொஸ்தப்படுத்த வேண்டும் என்றும் அகஸ்தியர் கூறுகிறார்.

காசநீர் ஏற்பட்டு 3 வருடஞ்சென்றபின்னர் தான் பக்குவம் அடைகின்றதென்று அகஸ்தியரும் 4 வருடங்கள் கழித்துத்தான் பக்குவத்திற்கு வரும் என்று நாகமுனிவரும் கூறுகிறார்கள். அவசரப்பட்டு சஸ்திரசிகித்ஸை செய்தால் கண்கள் கெட்டுவிடும். ஏனெனில் எவ்வாறு புளியம்பழம் நன்றாக பழுத்தவுடன் சதைவேறு ஓடுவேறு என்று தனித்தனியாக ஆகிறதோ அவ்வாறு கண்விழி (Lens) நன்கு முற்றியபின் சஸ்திரப்பிரயோகம் செய்கையில் வெகு எளிதில் அது வெளியே விழுந்துவிடும். காசரோகம் முற்றி நீர் பழுத்ததற்கு அறிகுறி யாதெனில் எண்ணெய் விளக்கைப்பார்த்தால் அதன் சுடர் எவ்வளவு உயரம், அகலம், முதலிய விபரங்கள் நன்றாகத்தெரியும். இக்குறி கண்டபின்னர் தான் சஸ்திரசிகித்ஸை செய்துகொள்ள வேண்டும்.

சிகித்ஸை.

ஆரம்ப தசையிலிருக்கும் பித்தகாசத்திற்கு எங்கள் பரம்பரையில் உபயோகப்படுத்திவரும் மருந்து "சண்டப்பிரசண்டன் தாமிராதி மாத்திரை" யாகும். ஒரு சொட்டு, பிள்ளைப்பாலை ஒரு வழவழப்பான கல்லில் வைத்து மாத்திரையைப்பற்றி வலமாக இழைத்துக்கெட்டியானபின் கல்லைவேறு பக்கல் மாற்றிக்கொண்டு, இடதுகை ஆள்காட்டி விரலினால் மருந்தை எடுத்து ஒரு செப்புக்கோலின் இரு முனைகளிலும் ஒரு பயறளவு எடுத்து இரு கண்களிலும் தீட்டவும். மருந்து போட்டவுடன் சிறிது எரிச்சலுண்டாகும். கண்ணீர் வெளிவந்தவுடன் எரிச்சல் நிற்கும். இம்மாதிரி சுமார் 6 மாதங்கள்வரை போட்டுக்கொண்டு வந்தால் கண் மறைவு நீங்கும். இதைப்போலவே "காசாங்குசம்" என்ற மருந்தையும் முற்கூறிய படி தீட்டிவரச் சௌக்யம் ஏற்படும். தைலமோவெனில் 'பித்தகாச' [illegible]மாகும்.

ஔஷதப் பிரகரணம்.

சங்காதி மாத்திரை.

[illegible]ால்துத்தம் வராகனெடை ½, துருசு வராகனெடை ½, ஊதுசங்கு [illegible]னெடை 4, விளாம்பிசின் வராகனெடை ½, இவற்றைப் புடமிட்

டெடுத்துக் கொள்ளவும். பின்பு ஒரு சுத்தமான கல்வத்திலிவைகளை வைத்து இளநீர் $\frac{1}{8}$ படியும் முலைப்பால் வீசம்படியும் விட்டு நன்றாக மையாக்கும் வண்ணம் அரைத்துக் கையினால் திரட்டி மாத்திரைகளாக்கி ஒரு பீங்கானில் வைக்கவும். ஒருவாரம் உலர்ந்தபின் சீசாவில் பத்திரப் படுத்தவும். ஒரு வருடஞ் சென்றபின்னர் உபயோகிக்கவும்.

படலாதி மாத்திரை.

மலை நாட்டில் விளைந்த வெள்ளைச்சாறணைவேரும், பீதரோகிணியும், சமனெடை நிறுத்துச் சேர்த்து வஸ்திரகாயஞ் செய்த (கப்பியைத் தள்ளக் கூடாது.) கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு நன்றாகவரைத்து மெழுகு பதத்தில் மாத்திரைகளாகச் செய்யவும்.

பிள்ளைப்பாலில் இழைத்துக் கண்களிலிட பில்லம், பூ, முதலானவை தீரும்.

சண்டப்பிரசண்டன் தாமிராதி மாத்திரை

துத்தம், துருசு, சங்கு இம்மூன்றையும் சமமெடுத்து பற்பமாக்கிக் கொள்ளவும். பழம், செம்பு, அரப்பொடி, ஆமையோடு இவைகளையும் சமமெடுத்து இடித்து எல்லாவற்றையும் ஒரு செப்புப் பாத்திரத்திலிட்டு நன்றாக கிளறிவிட்டுச் சரக்குகளுக்குமேல் 4 விரற்கடையளவு நிற்கும்வண்ணம் எலுமிச்சம்பழச் சாற்றைப் பிழியவும். அப்படியே அப் பாத்திரத்தை 3 மாதங்கள்வரை வைத்துவிடவும் பொடிகள் மடிந்து சாறு வற்றியிருக்கும். பின்பு அதைக் கல்வத்திலிட்டுப் பனைமட்டைசாறு விட்டு நன்றாகவரைத்து நீண்ட மாத்திரைகளாகத் திரட்டிவைத்துக் கொள்ளவும். மருந்தில்சேரும் செட்புத்துணுக்குகள் நன்றாக மடியும்வரை திரும்பத் திரும்ப அரைத்து வைத்துக்கொள்ளவும். இம்மாத்திரையைச் சுமார் 6 வருடங்கள் கழித்துத்தான் உபயோகிக்க வேண்டும்.

இம்மாத்திரையைப் பிள்ளைப்பாலிலிழைத்து பயறளவு இரு கண்களிலும் இடத் தலைவலி, கண்காசம், சுழல்வண்டெரிதல், பூ, படலம், நீல காசம் முதலான ரோகங்கள் தீரும்.

காசக்குளிகை

ஊதுசங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, அரிதாரம், அதிமதுரம், புங்கம் வித்து, பீதரோகிணி, துத்தம், மனோசிலை, இவைகளை கல்லுரலிலிட்டுத் தனித்தனியாகச் சூரணித்து வஸ்திரகாயம்செய்து நந்தியாவர்த்தி பூச்சாறுவிட்டு வெண்ணைபோல் அரைக்கவும் பின்பு நீண்ட மாத்திரைகளாக செய்து முக்கால் ஈரம் உலர்ந்தபின் கண்ணாடியின்மேல் வைத்து உருட்ட மினுமினுப்பாகும். 1 வருடம் சென்றபின்னர் கையாடவும். இம்மருந்தினால் காசநோய், படலம் இருநோய்களும் குணமாகும். இரத்தப்படலத்தில் இம் மருந்தைப் பிரயோகிக்க நாளுக்குநாள் கிரகணம் விடுபடுவதுபோல் நோய் குணமாகும். குவளைவிப்புருதிக்கும் மிக நன்மை தரும்.

இரணசிங்கி மாத்திரை

எண்ணெய் வெங்காரம் 10 வராகனிடை, வீரம் 1 வராகனிடை உளுத்தமாவு 2 வராகனிடை நிறுத்துக் கல்வத்திலிட்டுத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து மெழுகுபதமானபின் மாத்திரைகளாகத் திரட்டவும். இம்மருந்திற்கு "கண், புண்மாத்திரை" என்றும் பெயர். இம்மருந்தினால் இரணம், படர்தாமரை, அரிகிரந்தி, பிளவை முதலான ரோகங்கள் நிவர்த்தியாகும். மேலும் இமைப்பரு இரணசுக்கிரன், நயனப்படுவன், படலம் நீர்பில்லம், கிரிக்கட்டி முதலானவைகளுக்கும் இடலாம்.

கண்டுபற்பம்

கண்களில் நீரேற்பட்டு யாது காரணத்தாலோ சீழ்பிடித்து சரீரம், கனத்து, வலியுண்டாகி, கண்களில் நீர் வடிந்து சிவப்புத் தோன்றில் 'கண்டு' என்று சொல்லப்பட்ட "சினைக்கல்கண்டை" எறும்புகள் மொய்க்கும்படி விட்டுவிட மறுநாள் இதன் ஒளி மாறியிருக்கும். இப்படியாகக் "கண்டு" முழுவதும் மெருகற்றபின் இதைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து வஸ்திர காயஞ்செய்து காற்றுப்புகாத சீசாவில் பத்திரப்படுத்தவும். இதில் ஒரு சிறு கரண்டியளவு எடுத்து கண்களுக்குள்ளிடவும்.

வீரரஸப் பதங்கம்

வீரம் பலம் 1, ரஸம் ½ பலம் இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து ஒரு புதிய அகலில் சமமாகப் பரப்பி மேல் அகல் கொண்டு மூடி வாய்க்குச் சீலைமண் செய்து பிறகு 7 தடவை சீலை மண் செய்யவும். 2 நாட்கள் கடும் வெயிலில் வைத்து நன்கு உலர்ந்த பின் 3 செங்கற் கற்களை அடுப்பைப்போல் வைத்து அதன் கீழ் கொட்டையூத்தின எண்ணெயைவிட்டு ஒரு திரி போட்டு ஏற்றிய விளக்கைச் சீலை செய்த அகலின் மத்தியில் ஜ்வாலைபடும் வண்ணம் செங்கற்களின் இடையில் வைக்கவும். முதற் சாமத்தில் 1 திரியும், 2வது ஜாமத்தில் 2 திரியும் 3வது ஜாமத்தில் 3 திரி வீதமும் ஒவ்வொன்றாக அதிகரித்து 8 ஜாமமும் எரிக்கவும். ஒரு நாள் முழுவதும் ஆறவைத்த மறுநாள் சீலைமண்ணை நீக்கி ஜாக்ரதையாகத் திறந்துமேல் அகலை புரட்டிப்பார்க்க பதங்கம் ஏறியிருக்கும், கிழேவெள்ளைப் பேப்பரை வைத்து பன்னி மயிரினால் மெதுவாகச் சுரண்டி சீசாவில் பத்திரப்படுத்தவும்.

இப்பதங்கத்தில் ஒரு அரிசி எடை எடுத்து கருப்பொட்டியில் வைத்து விழுங்கிவிடச் சொல்லவும். ஆகாரம்- புதிய மண் பாத்திரத்தில் போதுமான ஜலத்தைவிட்டு அரிசியை நொய்யாக்கிப்போட்டு உப்புச் சேர்க்காமல் வேகவைத்துப் பசி வந்தபோது அதைச் சாப்பிடவும். நாட்டுச் சர்க்கரை கூட்டிக்கொள்ளலாம் இப்படி 3 நாட்கள் பத்தியமிருந்து சாப்பிட்டால் வாய், கண், மூக்கு, நாக்கு முதலியவைகளில் ஏற்படும் இழுப்புகள் நீங்கிவிடும்.

புகை மருந்து

கஸ்தூரி மஞ்சள், சந்தனத்தூள், கருங்குங்கிலியம் இம்மூன்றையும் சமனெடையெடுத்து உலர்த்தி இடித்துத் தூளாக்கி வைத்துக்கொள்ளவும்.

நயனரோக சிகித்ஸை

ஒருதூபக்காலில் நெருப்புத்தணலுண்டா
துணியினுல் மூக்காடிட்டுக் கொள்ளச்செய்து
மருந்தை அதிலிட்டுப் புகைக்கவும். அதைக்
பிடித்த கண்கள், குவளைப்படுவன், கண்ணீர் வடி
மாறிவிடும்.

பிளாஸ்திரி

நல்லெண்ணெய் 2சேர், ஈயச்செந்தூரம் 1 சேர் எடுத்.
ஒரு வாயகன்ற இரும்புச்சட்டியை அடுப்பிலிட்டு 2 சேர்
யையும் விட்டுக் காய்ச்சவும். எண்ணெய் கொதிக்கையில் செ
சிறுசிறு கரண்டியாக ப்போட்டு இரும்புச்சட்டுவத்தால் துழ
சிவப்பநிறம் மாறிக் கறுப்பு நிறமாகும். பின்பு மருந்தை கொஞ்ச
மேலே தூக்கிவிட்டால் அது கம்பிப்பதமாக வரவேண்டும். அட
லிதை வேறொரு இரும்புக்கிண்ணத்தில் ஊற்றி வைத்துக்கொள்ள

புண்களை ஆற்றுவதில் இப்பிளாஸ்திரி சிகரற்றது.

பிருங்காமலகத்தைலம்

நெல்லிவற்றல் கஷாயம் 3 படி, பசுவின் பால் 3படி கையாந்தகரைச்
சாறு 3 படி இம்மூன்றையும் ஒன்று கலந்து, அதிமதூரம், கோஷ்டம்,
ஏலக்காய், கிராம்பு, சண்பகப்பூ, சந்தனத்தூள், வெட்டிவேர், விலாமிச்சை
வேர் இவைகளை வகைக்கு 1 பலமெடுத்து பசுவின் பால் விட்டு
வரைத்து, நல்லெண்ணெய் 4 படியுடன் குழப்பி விடவும்.

இக்கலவையை யடுப்பின் மேல் வைத்துச் சிறு தீயாக
நீர் சுண்டிய பின்னர் மேலே நுரையுண்டாகும். அதன் கடுவ
மெழுகுபதமாக இருத்தல் வேண்டும். அச்சமயம் இதை வடிக்க
வில் பத்திரப்படுத்தவும்.

இதனுல் ஸ்நானஞ் செய்யக் கன்காசம், படலம், புகைச்சல், ப,
முதலானவை நீங்கும்.

ப்ருங்கராஜ தைலம்

கையாந்த கரைசாறு 4 சேர் நல்லெண்ணெய் 4 சேர், பசுவின் பால்
4 சேர் இவைகளை ஒன்று கலந்து கொண்டு பூலாங்கிழங்கு, கிளிஞூரம்
பட்டை, அதிமதூரம், சந்தணத்தூள், கோஷ்டம், கடுகரோகிணி, கிராம்பு
இவைகளை வகைக்கு 5 வராகனெடை எடுத்துத்தூள் செய்து போட்டு
எரிக்கவும். மெழுகு பதத்தில் வடிக்கட்டவும்.

நேத்திர வியாதிகளும், சிரோ வியாதிகளும் தீரும்.

வாதகாசத் தைலம்

கொடிவேலி வேர் 10 பலம் எடுத்து 2 மரக்கால் சுத்தஜலத்தில்
ஊறவைத்து எட்டொன்றுகக் காய்ச்சவும். பின்பு கருஞ்சீரகம், தாளிசபத்ரி

விபத்தி சூரணம்

...ணைரக்கிழங்கு, வாயுவிடங்கம், கடுக்காய்த்தோல். ...பு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய் ...½ பலம் சுத்தி செய்த சிவதை வேர் சூரணம் 15 ...கசல்லாசலிவிட்டு நன்ருக இடித்து வஸ்திரகாயஞ் செய்து

...வேண்டும்போது இச்சூரணத்தில் 3 வராகனெடையளவெடுத்துச் ...திறை வெல்லச்சர்க்கரை சேர்த்து வெந்நீருடன் கலக்கிப் பருகவும்.

சாதாரணக்குடலாக இருந்தால் சுமார் 4 அல்லது 5 தடவை மலப் பிரவிருத்தி உண்டாகும்.

கண்ணோய் அணுகாதிருக்க உபாயம்.

"தின்னார் பசலைக்கீரை ,தின்னமறந்தார் சீர்கேடாய்
பொன்னாங்காணிக் கறி கூட்டார் பூசார்பாதம் நெய் கூட்டார்
பன்னூர் மதியந்தனைப்பாரார் பால் வார்த்துண்ணார் பல்தேயார்
கண்ணோவதனால் கவல்வர் அதையாமும் சொல்லக்கடவோமே"
(இ—ள்)

முற்காலங்களில் முதியோர்கள் பண்ணைக்கீரை, சிறுகீரை, முதலான ...வைகளை உண்பார்கள். அதே போல் நாமும் உட்கொளளவேண்டும். ...ணைக்கீரையை வேகவைத்து உப்பிட்டு, புளிசேர்க்காமல் சாப்பிடு... இரவு நேரங்களில் புத்துருக்கு நெய்யை உள்ளங்காலில் தடவித் தூங்குவார்கள். ஆகாரத்தில் நிரம்ப நெய் சேர்த்து உட்கொள்ள ...சந்திர தரிசனம் செய்தல் முக்கியம். இரவில் பாலை பருகுவதை ...துடன் ஊற்றி சாப்பிடுதல் நலம். தினந்தோறும் பல்துலக்கு...யம்." இவ்வாருன பழக்கங்களைக் கைக்கொளளாதவர்கள் கண் ...ல் அவஸ்தைப் படுவார்கள். அதைத்தெரிவிப்பது எங்கள் கட...ம" என்று மிக அழகாக அகஸ்தியர் கூறியிருக்கிறார்.

வாழிய நலனே! வாழிய நலனே!!

